துணை ஆணையாளர் –1, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சேப்பாக்கம், சென்னை–5, அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திரு. அ. ஏகாம்பரம்.,

செ.மு.ஆணை எண்.அ4/ 24177 /2021 நாள் :10.05.2022

பொருள்: நிர்வாகம் – உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் – பணித்தொகுதி–IV – 2018 – 2019 மற்றும் 2019–2020 – இரண்டாம்கட்ட கலந்தாய்வு மூலம் இளநிலை உதவியாளர் பட்டியல் பெறப்பட்டது – பணி நியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்து – ஆணை பிறப்பித்தல்.

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண். 2357/PSD-E1/2020, நாள் : 13.10.2021.
2. துணை ஆணையாளர்–1, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் செயல்முறைகள் எண். அ4/24177/2021, நாள் : 29.10.2021.

*****

**ஆணை:**

பார்வை–1ல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடிதத்தின் வாயிலாக, இரண்டாம்கட்ட கலந்தாய்வு மூலம் இத்துறைக்கு இளநிலை உதவியாளர் பதவிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நபர்களுக்கு, பார்வை–2ல் கண்டுள்ள செயல்முறை ஆணையில் இளநிலை உதவியாளர்களாக பணி நியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது.

அவ்வாறு பணி நியமனம் வழங்கப்பட்ட நபர்களில், இத்துறைப் பணியில் சேர்ந்து இளநிலை உதவியாளர்களாக பணிபுரிந்து வரும் கீழ்காணும் நபர்களுக்கு, இளநிலை உதவியாளர் பதவியில், அவர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதியில், சென்னை உயர்நீதிமன்றம் / சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையிலுள்ள 2018–2019 மற்றும் 2019–2020 காலங்களுக்கான பணித்தொகுதி–IV பணி நியமனம் குறித்த ரிட் மனுக்களில் பிரகடனப்படுத்தப்படும் தீர்ப்பு முடிவுக்கு உட்பட்டு நிபந்தனை அடிப்படையில், பணி வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ.எண். | இளநிலை உதவியாளர் பெயர் தி/ள் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | N. வேல்ராஜ் | 10.11.2021 மு.ப. | 10.11.2021 மு.ப. |
| 2. | T. மகேஷ்குமார் | 10.11.2021 மு.ப. | 10.11.2021 மு.ப. |

பணி வரன்முறை செய்யப்படும் தேதியிலிருந்து மூன்றாண்டு கால தொடர்ச்சியான பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவ காலத்தில் வைத்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

தகுதிகாண் பருவகாலத்திற்குள், பவானிசாகரில் நடைபெறும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியினை திருப்திகரமாக முடிக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

துணை ஆணையாளர் –1

பெறுநர்
சம்பந்தப்பட்ட இளநிலை உதவியாளர்கள்

உதவி ஆணையாளர் அலுவலகம்
19 MAY 2022
உ.பொ.வ.(ம).நு.பா. துறை